பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**06 02 2026** **7 15**

வெள்ளிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மேகாலயாவில் சட்டவிரோத நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் **18** பேர் உயிரிழந்தனர். மீட்பு பணிகளுக்கு உதவ தேசிய பேரிடர் மீட்புப் படையின் **2** குழுக்கள் மேகாலயா விரைந்துள்ளன.

2. மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஜம்முவில் எல்லைப் பாதுகாப்பு குறித்து நேரில் ஆய்வு செய்கிறார்.

3. அடல் நகர்ப்புற மறுசீரமைப்பு திட்டத்தின்கீழ் இதுவரை நகர்ப்புறங்களில் **2** கோடியே **38** லட்சம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. அமெரிக்கா - ஈரான் இடையே அணுசக்தி தொடர்பான பேச்சுவார்த்தை மஸ்கட்டில் இன்று நடைபெற உள்ளது.

5. மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் இறுதிப் போட்டியில் பெங்களூரு அணி **6** விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்று கோப்பையை கைப்பற்றியது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

மேகாலயாவில் சட்டவிரோத நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட வெடி விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.

மேலும் பல தொழிலாளர்கள் சுரங்கத்திற்குள் சிக்கியுள்ளனர்.

அவர்களை மீட்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

இதுவரை 18 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

விபத்து குறித்து விசாரணை நடத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளதாக மேகாலயா முதலமைச்சர் திரு. கான்ராட் சங்மா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், மீட்புப் பணியில் உதவுவதற்காக வெடிவிபத்து ஏற்பட்ட இடத்திற்கு, தேசிய பேரிடர் மீட்புப் படையின் இரண்டு குழுக்கள் விரைந்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், ஏற்கனவே மீட்புப் படையின் ஒரு குழுவினர் விபத்து நடந்த இடத்திற்குச் சென்றடைந்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக மேகாலயா முதலமைச்சர் திரு. கான்ராட் சங்மாவுடன் பேசிய திரு. அமித் ஷா, மத்திய அரசின் சார்பில் தேவையான அனைத்து உதவிகளும் வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

இதற்கிடையே இந்த விபத்து குறித்து ஆழ்ந்த வேதனை தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமரின் நிவாரண நிதியில் இருந்து தலா 2 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

மேகாலயா அரசு உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 3 லட்சம் ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளது.

இந்த விபத்து குறித்து மாநில அரசிடம் அறிக்கை கேட்கப்பட்டுள்ளதாக மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று ஜம்முவில் எல்லைப் பாதுகாப்பு குறித்து நேரில் ஆய்வு செய்கிறார்.

கத்துவா மாவட்டத்தின் ஹிரா நகரில் உள்ள சர்வதேச எல்லையை அவர் இன்று பார்வையிடுகிறார்.

எல்லை தாண்டிய ஊடுருவலைத் தடுக்க எல்லைப் பாதுகாப்புப் படை நிறுவியுள்ள கண்காணிப்பு சாதனங்களையும் அவர் ஆய்வு செய்ய உள்ளார்.

போபியா மற்றும் குர்னாம் ஆகிய இடங்களில் உள்ள எல்லைப் பாதுகாப்பு படையின் புற காவல் நிலையங்களையும் பார்வையிட உள்ளார்.

இதனைத் தொடர்ந்து இன்று பிற்பகல் ஜம்முவில் நடைபெறும் உயர்நிலைப் பாதுகாப்பு ஆய்வுக் கூட்டத்தில் துணைநிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, உள்துறை அமைச்சகத்தின் உயரதிகாரிகள், துணை ராணுவப் படையின் தலைவர்கள் ஆகியோருடன் திரு. அமித் ஷா ஆலோசனை நடத்த உள்ளார்.

<<<<>>>>

அடல் நகர்ப்புற மறுசீரமைப்பு திட்டத்தின்கீழ் இதுவரை நகர்ப்புறங்களில் 2 கோடியே 38 லட்சம் குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற

விவகாரங்கள் துறை இணையமைச்சர் திரு. **Tokhan Sahu** தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், **2015**ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இத்திட்டம் அம்ருத்**-2.0** என விரிவுபடுத்தப்பட்டு நகரங்களை, குடிநீர் வசதியில் தன்னிறைவு பெற்றவையாக மாற்றுவதை நோக்கமாக கொண்டுள்ளது என்று கூறினார்.

இத்திட்டத்தின்கீழ் குடிநீர் வழங்கல், பாதாளசாக்கடை மேலாண்மை, நீர்நிலைகளுக்கு புத்துயிர் அளித்தல் ஆகிய பணிகளுக்காக பல்லாயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

அம்ருத் மித்ரா திட்டத்தின்கீழ் **38** ஆயிரத்துக்கும் மேற்பட் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் குடிநீரின் தரத்தைப் பரிசோதிக்கும் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

பஞ்சாப், ஹரியானா, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட வட இந்திய மாநிலங்களில் பயிர்க் கழிவுகளை எரிப்பதால் ஏற்படும் சுற்றுச்சூழல்

மாசை தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணையமைச்சர் திரு. கீர்த்திவர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் நேற்று கேள்வி நேரத்தின்போது இதனைத் தெரிவித்த அவர், செயற்கைக்கோள் தரவுகளைப் பயன்படுத்தி கண்காணிப்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக கூறினார்.

மாலை நேரங்களில் அதிகாரிகள் வாகனங்களில் ரோந்து சென்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

அரசு எடுத்த முயற்சிகளின் காரணமாக கடந்த ஆண்டு பயிர்க்கழிவுகள் எரிப்பது குறைந்துள்ளதோடு, நெல் அறுவடை காலத்தில் 90 சதவீத தீ விபத்துகள் குறைந்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<>>>>

மத்திய அரசு, நாகாலாந்து அரசு மற்றும் கிழக்கு நாகாலாந்து மக்கள் அமைப்பு ஆகியவற்றுக்கு இடையே 'எல்லைப்புற நாகாலாந்து பிராந்திய ஆணையம்' உருவாக்குவதற்கான ஒப்பந்தம் நேற்று புதுடெல்லியில் கையெழுத்தானது.

மத்திய உள்துறை அமைச்சர் **திரு. அமித் ஷா** நாகாலாந்து முதலமைச்சர் **திரு. நெய்பியூ ரியோ** முன்னிலையில் இந்த ஒப்பந்தம் கையெழுத்தானது.

நாகாலாந்தின் 6 கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த அங்கீகரிக்கப்பட்ட 8 நாகா பழங்குடியினரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கிழக்கு நாகாலாந்து மக்கள் அமைப்பு, இந்த ஒப்பந்தத்தில் முக்கியப் பங்கு வகித்தது.

இதன் மூலம் நாகாலாந்தின் துயேன்சாங், மோன், கிபிர், லாங்லெங், நோக்லாக் மற்றும் ஷாமடோர் ஆகிய 6 மாவட்டங்களை உள்ளடக்கிய 'எல்லைப்புற நாகாலாந்து பிராந்திய ஆணையம்' அமைய வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மேலும், 46 முக்கிய துறைகள் சார்ந்த அதிகாரங்கள் இந்த ஆணையத்திற்கு வழங்கப்பட உள்ளன.

<<<<>>>>

வருகிற ஹோலி பண்டிகையை முன்னிட்டு ரயில்வே நாடு முழுவதும் ஆயிரத்து 400க்கும் மேற்பட்ட சிறப்பு ரயில்களை இயக்க திட்டமிட்டுள்ளது.

இந்த எண்ணிக்கை கூட்ட நெரிசலைப் பொறுத்து ஆயிரத்து **500** வரை அதிகரிக்க கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஹோலிப் பண்டிகையின்போது ஆயிரத்து **144** சிறப்பு ரயில்கள் இயக்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டு கூடுதலாக இயக்கப்பட உள்ளன.

இந்த ஆண்டு அதிகபட்சமாக கிழக்கு மத்திய ரயில்வே **255** சிறப்பு ரயில்களையும், மேற்கு ரயில்வே **233** ரயில்களையும், தெற்கு ரயில்வெ **39** ஹோலி பண்டிகை சிறப்பு ரயில்களையும் இயக்க உள்ளன.

அடுத்த மாதம் இயக்கப்பட உள்ள இந்த சிறப்பு ரயில்கள் மூலம் முக்கிய நகரங்களுக்கு இடையிலான போக்குவரத்து எளிதாக்கப்படும் என்றும், பண்டிகை காலத்தில் பொதுமக்கள் எந்தவித சிரமமும் இல்லாமல் பயணிப்பதை உறுதி செய்ய முடியும் என்றும் ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மத்திய கிழக்கில் நிலவி வரும் தீவிர பதற்றங்களுக்கு மத்தியில், அமெரிக்கா மற்றும் ஈரான் நாடுகளுக்கு இடையிலான நேரடி அணுசக்தி பேச்சுவார்த்தை ஓமன் தலைநகர் மஸ்கட்டில் இன்று நடைபெறுகிறது.

மேற்கு ஆசிய விவகாரங்களில் நடுநிலை வகிக்கும் ஓமன், ஏற்கனவே அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான பலகட்டப் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

முன்னதாக துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இந்தப் பேச்சுவார்த்தையை நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது.

இருப்பினும், அணுசக்தி திட்டம் மற்றும் அமெரிக்காவின் பொருளாதாரத் தடைகளை நீக்குவது குறித்து மட்டுமே பேச வேண்டும் என்பதில் ஈரான் உறுதியாக இருந்ததால், சந்திப்பு மஸ்கட்டிற்கு மாற்றப்பட்டது.

இந்த பேச்சுவார்த்தையில் ஈரான் தரப்பில் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. அப்பாஸ் அராகச்சியும் அமெரிக்க தரப்பில் மேற்கு ஆசிய தூதர் **திரு. ஸ்டீவ் விட்காஃப்** மற்றும் **திரு. ஜாரெட் குஷ்னர்** ஆகியோரும் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

<<<<>>>>

துபாயில் நடைபெற்ற உலக அரசு உச்சி மாநாட்டில், இந்தியாவைச் சேர்ந்த ஆசிரியர் **திருமதி. ரூபல் நாகிக்கு 2026-**ஆம் ஆண்டிற்கான 'உலகளாவிய ஆசிரியர் விருது' வழங்கப்பட்டுள்ளது.

10 லட்சம் டாலர் பரிசுத் தொகை கொண்ட இந்த விருதினை, துபாய் இளவரசர் **திரு. ஷேக் ஹம்தான் பின் முகமது பின் ரஷித் அல் மக்தூம்** வழங்கிக் கௌரவித்தார்.

பாழடைந்த சுவர்களைக் கல்வி போதிக்கும் சுவரோவியங்களாக மாற்றி, அதன் மூலம் குழந்தைகளுக்கு எழுத்து, வாசிப்பு, கணிதம் மற்றும் சுகாதாரம் குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தியதற்காக **திருமதி. ரூபல் நாகி** இந்த விருதிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தமக்குக் கிடைத்த பரிசுத் தொகையைக் கொண்டு ஏழை இளைஞர்களுக்காக இலவசத் தொழிற்பயிற்சி மற்றும் டிஜிட்டல் கல்வி வழங்கும் நிறுவனத்தைத் தொடங்கப் போவதாக **திருமதி. ரூபல் நாகி** தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

ஆஃப்கனிஸ்தானில் நேற்றிரவு நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவில் நான்கு புள்ளி 3ஆக பதிவானது.

சேத விவரங்கள் குறித்த தகவல் இதுவரை வெளியாகவில்லை.

வடகிழக்கு மாநிலமான சிக்கிமில் இன்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவில் நான்காக பதிவானது.

கொல்கத்தாவிலும் இது உணரப்பட்டதாக தேசிய புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

மகளிர் ப்ரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் பெங்களூரு அணி 6 விக்கெட் வித்தியாசத்தில் தில்லி அணியை வென்று கோப்பையை கைப்பற்றியது.

வதோதராவில் நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில் முதலில் விளையடிய தில்லி அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 203 ரன் எடுத்தது.

204 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய பெங்களூரு அணி 2 பந்துகள் மீதமிருக்கையில் 4 விக்கெட் இழப்புக்கு இலக்கை எட்டி வெற்றி பெற்றது.

-------------

19 வயதுக்குட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

ஜிம்பாப்வேயின் ஹராரேயில் பிற்பகல் 1 மணிக்கு இந்தப் போட்டி தொடங்குகிறது.

--------------

ஆசிய பேட்மிண்டன் அணிகள் சாம்பியன் போட்டியில் நடப்பு சாம்பியனான இந்தியா இன்று காலிறுதியில் சீனாவை எதிர்கொள்கிறது.

சீனாவின் **Qingdao** நகரில் இப்போட்டி நடைபெற உள்ளது.

இந்திய ஆடவர் அணி காலிறுதியில் தென்கொரியாவை எதிர்கொள்ள உள்ளது.

**<<<<The End>>>>**